# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

## <u>பதிய டிராக்டர் வாங்க தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் திட்டத்தில் கீழ் மானியம் வழங்க புகார்தாரரிடம் ரூ.15,000/- லஞ்சம் கேட்டு பெற்ற மாவட்ட மேலாளர் மற்றும் தனிநபர் கைது</u>

புகார்தாரர் திரு.குமார், தாழ் எரும்பூர் கிராமம், மனியார்கொண்டம் அஞ்சல், பெத்தநாயக்கன் தாலுகா, சேலம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் திட்டத்தில் கீழ் மானியம் மூலமாக ரூ.7,50,000/- மதிப்பில் புதிய டிராக்டர் ஒன்றை வாங்க தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழக (TAHDCO) அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். திருமதி.G.சாந்தி, மாவட்ட மேலாளர், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம், ஈரோடு மாவட்டம் பொறுப்பு சேலம் மாவட்டம் மற்றும் திருமதி.M.சாந்தி, தனிநபர் ஆகியோர் புகார்தாரரிடம் இந்த திட்டத்தின் கீழ் மானியம் வழங்க தங்களுக்கு 2 சதவீத பணமான ரூ.15,000/-யை லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சேலம் பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் இன்று 15.06.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.G.சாந்தி, மாவட்ட மேலாளர் அவர்களின் உத்தரவின் பேரில் திருமதி.M.சாந்தி, தனிநபர் புகார்தாரரிடமிருந்து லஞ்சபணம் ரூ.15,000/-யை பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.